04/01/2025

## MINUTES OF MEETING OF THE BOARD OF STUDIES

**Department** : Tamil

**Venue** : Board Room

**Date** : JANUARY 4th, 2025

**Agenda** : Planning and suggestions for future subject-specific events, and recommending the panel of names to the Academic Council for the appointment of examiners.

**The following members were present in the meeting:**

1. Dr. J. RADHAKRISHNAN, Assistant Professor & Head, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram - Chairman
2. Dr. G. JAYASHREE, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member.
3. Dr. T.S.JEYALAKSHMI, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member.
4. Dr. S.SIVAGAMASUNDARI, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member.
5. Mr. S. DEIVASIGAMANI, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts & Science College, Enathur, Kanchipuram – Member.
6. Dr. S. NEELAMEGAN, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member.
7. Dr. N. APPADURAI, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member.
8. Mr. B. VELU, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member.

9. Mr. M. GANAPATHY, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member

10. Dr. M. ANBAZHAGAN, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member

11. Dr. K.R. VENKATESAN, Principal, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram - Special invitee

**The following members could not attend the meeting due to their prior commitments and were granted leave of absence:**

1. **Nil**

*2024-25 ஆம் கல்வியாண்டின் முதல் பருவம் முடிவடைந்து இரண்டாம் பருவம் தொடங்கியுள்ள நிலையில், பாடத்திட்டம் சார்ந்த செயல்பாடுகள் மற்றும் கடந்த ஐந்து மாத கால நிகழ்வுகளின் மதிப்பாய்வுக் கூட்டமாக இக்கூட்டம் அமைந்தது. இதில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன:*

***1. பாடநூல் உருவாக்கம் - முன்னேற்ற அறிக்கை:***

*கடந்த ஆகஸ்ட் 6-ஆம் தேதி கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, **'தமிழியல் கல்வி ஆதார வளங்கள்'** மற்றும் **'தமிழ் மொழி அமைப்பியல்'** ஆகிய பாடங்களுக்கான வரைவுப் பிரதிகள் (Draft Manuscripts) துறையின் ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்டு முதற்கட்ட ஆய்வில் இருப்பது குறித்துத் தெரிவிக்கப்பட்டது. இவற்றை பிப்ரவரி இறுதிக்குள் அச்சுக்குக் கொண்டு செல்ல முடிவெடுக்கப்பட்டது. அதே போல இந்த பருவத்திலும் **தமிழ்ப் பொருண்மையியல், அறிவியல் தமிழ், நாடகத்தமிழ், இசைத்தமிழ்** பாடங்களுக்கும் பாடநூல் உருவாக்கப்படவேண்டும் என்பதும் பிற பாடங்களுக்கான தக்க பாடநூல்கள் குறித்தும் கருத்துரைகள் பெறப்பட்டன.*

*மொழிப்பாடத்தில் மூன்று மற்றும் நான்காம் பருவத்தில் **தமிழக வரலாறும் பண்பாடும்** மற்றும் **அறிவியலும் தமிழும்** பாடங்கள் நடத்துவதில் உள்ள இடர்பாடுகள் பகிர்ந்துகொள்ளப்பெற்றன. நான்கு பருவங்களிலும் அவை பகிர்ந்தளிக்கப்பெற்று அவற்றுக்கு இணையான இலக்கியப் பகுதிகளும் இணைந்து*

இருந்தால் சிறப்பாக இருக்கும் எனக் கருத்துரைக்கப்பெற்றது. இது வருங்கால பாடத்திட்டத் திருத்தத்தில் கவனத்தில்கொள்ள முடிவுசெய்யப்பெற்றது.

**2. செயல்வழித் தேர்வு (Action-based Internal Assessment) - மதிப்பீடு:**

முதல் பருவத்தில் **பேச்சுக்கலைத் திறன்** (அறிவன் வட்டத்தில் பேசுதல்) மற்றும் **சிறார் இலக்கியம்** (ஒலிப்பதிவு திரட்டுதல்) போன்ற பாடங்களுக்கு செயல்வழி மதிப்பீட்டுத் தேர்வு முறையை அமல்படுத்தியதன் மூலம் மாணவர்களின் தன்னம்பிக்கை மற்றும் தேடல் திறன் அதிகரித்துள்ளதை ஆசிரியர்கள் சுட்டிக்காட்டினர். இதன் வெற்றியைத் தொடர்ந்து, தற்போது தொடங்கியுள்ள இரண்டாம் பருவத்தில் **'தமிழர் மரபு மருத்துவம்', 'கல்வெட்டியல்' சுற்றுலாவியல்** (Tourism) **போட்டித் தேர்வுகளுக்குரிய தமிழ் இலக்கிய வரலாறு** மற்றும் **'இதழியல்'** பாடங்களுக்கு நேரடிச் செயல்முறை மதிப்பீடுகளை எவ்வாறு விரிவுபடுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

**3. நிகழ்வுகள் மீளாய்வு (ஆகஸ்ட் - டிசம்பர் 2024):**

நாட்டுப்புற கலைகள், கருவிகள், புழங்கு பொருட்கள், விளையாட்டுகள், பொம்மைகள், கிராமிய உணவு வகைகள் முதலியன கொண்டு 31/08/2024 அன்று நடைபெற்ற **'நாட்டுப்புறவியல் கண்காட்சி'**, இந்து சமய மன்றத்தின் நிதி நல்கையுடன் 06/12/2024 தாம்பரம் ஸ்ரீ சங்கரா வித்யாலயாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் துணைத்தலைவர் டாக்டர் சுதா சேஷயைன் தலைமையில் நடத்தப்பெற்ற **மொழிவளப்பயிலரங்கம்** மற்றும் 30.12.2024, 31.12.2024 ஆம் தேதிகளில் நடைபெற்ற 'பாவை விழா' மற்றும் **பக்தி நெறி பயிலரங்கம்** ஆகியவற்றின் செயல்பாடுகளை குழு பாராட்டியது. மேலும் கல்லூரி நிர்வாகத்தால் **ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஆராதனை அறக்கட்டளை** ஏற்**படுத்தப்பெற்று** அதன் முதல் சொற்பொழிவு 26.12.2024 அன்று **சேக்கிழார் சொன்னதும் சொல்லாததும்** என்ற பொருண்மையில் புலவர் **வே. மகாதேவன்** அவர்களைக் கொண்டு நடத்தப்பெற்றது. அது நூலாக்கவும் பரிந்துரைக்கப்பெற்றுள்ளது. இவையன்றி சென்ற பருவத்தில் **கோலாட்டம், சிலம்பம், மரபிசை** போன்ற கலைப் பயிற்சிகளை தனியே தக்க வல்லுநர்களைக்கொண்டு வழங்கியமை மாணவர் திறன் மேம்பாட்டில் பெரிதும் துணைநிற்பதாக அமைந்தது எனப் பாராட்டப்பெற்றது.

*4. **உலகத் திருக்குறள் மாநாடு - இறுதித் திட்டமிடல்:***

*கடந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டவாறு,* ***'உலகத் திருக்குறள் மையம்'*** *மற்றும் 'விஜயலட்சுமி குணசேகரன் அறக்கட்டளை'யுடன் இணைந்து* ***"வள்ளுவரின் மீட்பியல் சிந்தனைகள்"*** *என்ற தலைப்பிலான பன்னாட்டு ஆய்வு மாநாட்டினை 25/01/2025 அன்று நடத்த இறுதி முடிவு செய்யப்பட்டது. இதற்கான 16 சிறந்த ஆய்வுக்கட்டுரைகளைத் தேர்வு செய்து, ஆய்வுக்கோவையாக (ISBN எண்ணுடன்) அன்றே வெளியிடத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய குழு உறுப்பினர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.*

*5. **களப்பயணம் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி:***

*ஜனவரி மாதம் நடைபெற உள்ள* ***'சென்னை புத்தகக் காட்சி'*** *மற்றும்* ***'காஞ்சிபுரம் புத்தகத் திருவிழா'*** *ஆகிய நிகழ்வுகளுக்கு மாணவர்களை அழைத்துச் செல்வதன் மூலம் நூலகவியல் மற்றும் பதிப்புக்கலை பாடங்களுக்கு நேரடிப் பயிற்சி வழங்க முடிவானது. கணித்தமிழ்ப் பேரவை மூலம் 'வலைப்பூ (Blog) உருவாக்கம்' மற்றும் 'Google Tools' பயிற்சிகளை பிப்ரவரி மாதத்தில் தீவிரப்படுத்த திட்டமிடப்பட்டது.*

*6. **திட்டக்கட்டுரை திட்டமிடல்:***

*நிறைவாண்டு மாணவர்கள் நிறைவு பருவத்தில் திட்டக்கட்டுரை தாளுக்காக மாணவர்களை காஞ்சிபுரத்துக் கோயில்கள் மற்றும் நாட்டுப்புற கலைக்குழுக்கள் என்ற பொது பொருண்மையில் பயிற்சி அளிப்பது என முடிவுசெய்யப்பெற்று, மாணவர்களின் விருப்பங்களின் அடிப்படையிலேயே நெறியாளர்களைப் பிரித்து ஆற்றுப்படுத்துவது எனத் தீர்மானிக்கப்பெற்றது.*

*7. **தேர்வுக் குழுப் பட்டியல் (Panel of Examiners):***

*திட்டக்கட்டுரைத் தாளுக்கான புறநிலைத் தேர்வாளர்கள், ஏப்ரல் 2025 பருவத் தேர்விற்கான வினாத்தாள் தயாரிப்பாளர்கள் மற்றும் புறநிலை மதிப்பீட்டாளர்களின் புதிய பட்டியலைத் தயாரித்து கல்வி அலுவல் பேரவையின் (Academic Council) ஒப்புதலுக்கு அனுப்பி வைக்க முடிவு செய்யப்பட்டது.*

**Signature of Members:**

1. Dr. J. RADHAKRISHNAN -
2. Dr. G. JAYASHREE -
3. Dr. T.S.JEYALAKSHMI -
4. Dr. S. SIVAGAMASUNDARI -
5. Mr. S. DEIVASIGAMANI -
6. Dr. S. NEELAMEGAN -
7. Dr. N. APPADURAI -
8. Mr. B. VELU -
9. Mr. M. GANAPATHY -
10. Dr. M. ANBAZHAGAN -
11. Dr. K.R. VENKATESAN -